**CC No.264/2015 அ.சா.5: நேதாஜி த/பெ.கருப்பையா நாள்: 19.11.2025**

**(எதிரி ஆஜர்)**

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் எதிரி ஓட்டி வந்த வாகனத்தில் பின்னர் அமர்ந்து சென்றேன் என்றால், சரிதான். மேற்படி வாகனம் கிழக்கிலிருந்து, மேற்காக சென்றது என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது எனது ஊரிலிருந்து எவ்வளவு தூரம் என்றால், சுமார் 6–7 கி.மீ. இருக்கும். எதிரி மிதமான வேகத்தில், மெதுவாகத்தான் சென்றார் என்றால், சரிதான். அப்போது எதிரிரே வந்த விபத்தில் இறந்துபோன நபர்தான் திடீர் என பள்ளத்தை பார்த்து இடது ஓரமாக சென்றவர், வலது ஓரமாக எதிரியின் வாகனத்தினை நோக்கி வந்துவிட்டார் என்றால், சரிதான்.

2) நானும் எதிரியும் சென்ற சாலையானது குண்டும் குழியுமாக பள்ளத்துடன் இருந்தது என்றால், சரிதான். விபத்தில் இறந்துபோன நபர் தன்னுடைய வாகனத்தை, எங்களது வாகனத்தின் வலது பக்கமாக பிரேக் உள்ள பக்கம் மோதிவிட்டார் என்றால், சரிதான். விபத்தில் தூக்கி எறியப்பட்டு எதிரிக்கு முகம், தலை, தாடை பகுதி முழுவதுமாக உடைந்துவிட்டது, உடம்பின் பல இடங்களில்காயம் இருந்தது. எதிரிக்கு வலது பக்க கை உடைந்துவிட்டது. விபத்து நடந்தபோது விபத்தில் இறந்துபோன நபரின் உறவினர்கள் யாரும் அங்கு இல்லை. விபத்து நடந்த பகுதியில் கிராம நபர்கள் எங்களை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்தில் இறந்துபோன நபர் கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் வாகனத்தினை ஓட்டி வந்ததால்தான் விபத்து எற்பட்டது என்றால், சரிதான். நான் ஏற்கனவே இந்நீதிமன்றதில் சாட்சியமளித்தபோது மிதமான வேகத்தில் எதிரி வாகனத்தினை ஓட்டிவந்தார் என்றுதான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.

**மறுவிசாரணை:**

இல்லை.